2. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

செஞ்சியை சுற்றுலா மையமாக்கல்

* 623 வினா—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு செய்தி சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாடு சுற்றுலா வாரியம், செஞ்சி சுற்றுலாவுக்கான இடம் என்று ஏற்றுக் கொண்டதா ?

(ஆ) ஆம் எனில், அங்கு ஒரு சிற்றுண்டி இல்லம் கட்டும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) தற்போது இல்லை.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவரவர்களே, இது ஒரு டூரிஸ்ட சென்டர் என்று அறிவித்த பிறகு ரெஸ்டாரண்ட் இல்லாதது எந்தவகையில் சரியாக இருக்கும் ? குறைந்த பட்சம் அந்த இடத்தைப் பார்வையிட வருபவர்களுக்கு ரெஸ்ட்டாரண்ட் இருப்பது அடிப்படைத் தேவையில்லையா? அதை உடனடியாக அமைப்பதற்கு ஏன் முன்வரவில்லை ? அதற்கு என்ன தடையிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவரவர்களே, டூரிஸ்ட சென்டர் என்று அறிவித்துவிட்டு மாநில அரசு நடவடிக்கை எடுப்பது என்கின்ற திட்டம் இல்லை. மத்திய அரசால் தமிழ்நாட்டிலே உள்ள சுற்றுலா மையங்கள் எவை யெவை என்ற விவரங்கள் கேட்கப்பட்டபொழுது அந்தப் பட்டியலில், ''தமிழக சுற்றுலா வள மதிப்பீட்டில்'' இந்த மையம் சேர்க்கப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. இதற்கு சுமாரான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு ரூபாய் 15 இலட்சம் தோராயச் செலவு செய்ய வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் பதில் தரப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவரவர்களே, செஞ்சிக் கோட்டை தேசிங்குராஜன் கோட்டையாக இருந்தது. இப்பொழுது இருந்து கொண்டுதான்இருக்கிறது. அப்படிப்பட்ட வரலாற்றுப் பெருமை படைத்த அந்த கோட்டையையும்,

1978 மார்ச் 20]

அதற்குப் பக்கத்திலிருக்கிற அகழிகளையும், இப்படிப்பட்ட பழைய கால வரலாற்றுப் பெருமையை நிலைநாட்டக்கூடிய அந்த இடத்தை துப்புரவு செய்து, அபிவிருத்தி செய்து பழங்காலப் பெருமையைக் காப்பாற்றுவதற்கும், இடிபாடுகளை எடுத்துச் சுத்தமாக வைக்கவும் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, செஞ்சிக் கோட்டைப் பகுதி தொல்பொருள் ஆராய்ச்சித் துறையிலே இருக்கிறது. அவர்கள் மேம்படுத்தி அதை ஒரு மிகச் சிறந்த சுற்றுலா மையமாக ஆக்குவதற்கு தமிழ்நாடு அரசின் சுற்றுலாத் துறை பரிசீலனையில் வைத்துக் கொண்டிருக்கிறது.

திரு. அ. க. அரங்கநாதன் : பேரவைத் தலைவரவர்களே செஞ்சிக் கோட்டையில் அரங்கநாதர் கோயில் என்ற ஒரு கோயில் இருந்தது. அந்தக் கோயிலை அழகுபடுத்தி, அங்கே வணங்குவதற்குரிய, தெய்வ வழிபாட்டுக்கு ஏற்பாடு செய்ய முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : நான் முன்னுலே சொன்னபடி, செஞ்சிக் கோட்டைப் பகுதி சுற்றுலாத்துறையினிடத்திலே இல்லை. ஆகவே, இந்தக் கேள்வியை அந்தத் துறையைச் சேர்ந்த அமைச்சரிடம் கேட்டால் பதில் கிடைக்கும் .

தீர்த்தமலையில் சுற்றுலா விடுதி.

* 624 வினு—திரு. எம். அண்ணுமலை: மாண்புமிகு செ சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்கண்— வினுவக்கு விடையளிப்பாரா—

அரூர் வட்டம், தீர்த்தமலையில் சுற்றுலா விடுதி கட்டும் செயறகுறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இல்லை.

திரு. எம். அண்ணுமலை : தலைவரவர்களே, அரூர் வட்டம் தீர்த்தமலையிலுள்ள அந்த இயற்கையான நீரூற்று அந்த மலையிலுள்ள இரும்பு, மற்றும் தாதுப் பொருள்களைக் கொண்டிருப்பதால், அவற்ருல் சரும நோய் போன்ற நோய்கள் தீர்க்கப்படுவதாக தினசரி ஆயிரக்கணக்கான யாத்ரீகர்கள் அங்கு வந்து